1982 பிப்ரவரி 17]

கீழ்பவானி பாசன பிரதான கால்வாய் மராமத்துப்பணி

*வினா எண். 236.— திரு. ச. பாலகிருஷ்ணன் திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பவானி பாசன பிரதான கால்வாய்க்கு சிமெண்ட் பூசி நீர்க் கசிவைத் தடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) அத்திட்டம் எப்பொழுது செயல்படுத்தப்படும்?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) (ஆ) : இத்திட்டத்திற்கான விரிவான ஆய்வு, தலைமைப் பொறியாளரால் மேற்கொள்ளப்படவிருக்கிறது. ஆய்வுக்குப் பின் முடிவெடுக்கப்படும்.

(இ) விரிவான ஆய்வு இன்னும் நடைபெறாததால் இத்திட்டத்திற்கு நடப்பு ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(முற்பகல் 10.10)

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கால்வாயிற்கு சிமென்ட் பூசி நீர்க்கசிவைத் தடுப்பதால் சேமிக்கப்படும் தண்ணீரின் அளவு எவ்வளவு? அந்தத் தண்ணீரை எந்த முறையில் விநியோகம் செய்வதற்கு உத்தேசம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது முன்னோடி அறிக்கைதான் நமக்குத் தயாரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி கிட்டத்தட்ட 50 கோடி ரூபாய் செலவில் கீழ்பவானி பிரதான துணைக் கால்வாய்களை நவீனப்படுத்தினால் 62,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை விரைவில் எடுப்பதன் மூலம் வறண்ட பகுதியாக இன்றைக்குக் கருதப்படும் பெரியார் மாவட்டம் அல்லது கோவையின் ஒரு பகுதியில் வளம் ஏற்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 50 கோடி ரூபாய் பொருட்செலவில் நிறைவேற்றப்படுவதற்கான திட்டம் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கனவே, இந்தக் கீழ்

[1982 பிப்ரவரி 17

பவானி ஆற்றிலிருந்து 33 சதவீதம் கசிவதாகப் பொறியாளர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட அந்தக் கசிவு நீரைப் பயன்படுத்துகின்றபொழுது குளம் குட்டைகளுக்கும் தண்ணீர் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா? அல்லது முழுமையும் பாசனத்திற்கே விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கசிவு நீரைப் பயன்படுத்த வேண்டும். அங்கேயுள்ள கண்மாய்கள், குளங்களுக்கெல்லாம் நீரைக்கொடுத்து அந்த நீரைத் தேக்கி வைக்க வேண்டுமென்பது ஒரு கருத்து; கால்வாயை நவீனப்படுத்தி கிட்டத்தட்ட 62,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கொடுப்பது என்பது இன்னொரு கருத்து. இப்பொழுது இந்த இரண்டு கருத்துருக்களும் பரிசீலனையில் இருக்கின்றன.

திரு. சு. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தற்போது இந்தக் கசிவு நீரைப் பயன்படுத்தி ஏராளமான சிறு விவசாயிகள் வேளாண்மை செய்து வருகிறார்கள். சிமெண்ட் பூசப்படுவதால் இந்த விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் படுவார்கள். எனவே, இவர்களை மனத்திற்கொண்டு, சிமெண்ட் பூசுவதால் மிச்சம் ஆகின்ற தண்ணீரைப் புதிய நிலங்களுக்கு வழங்கும்பொழுது, இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு முன்னுரிமை கொடுத்து வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: பேரவைத் தலைவரவர்களே, நவீனப்படுத்தும்பொழுது கரையோரப் பகுதிகளில் மட்டும்தான் நாம் இப்பொழுது சிமெண்ட் லைனிங் சேனலைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். அதன் காரணமாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போலப் பெரிய பாதிப்பு வராது. ஆனால் கரையையொட்டியுள்ள பகுதிகளிலே இந்தக் கசிவுநீரைப் பயன்படுத்துகின்ற விவசாயிகளுக்கு ஓரளவிற்குப் பாதிப்பு ஏற்படலாம். கூடுமானவரையில் பாதிப்பு ஏற்படாத அளவிற்குத் தக்க நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன்படக்கூடிய தாலுக்காக்கள் எவை எவை என மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

]1982 பிப்ரவரி 17

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது: தலைவரவர்களே, ஆய்விலே இருக்கிறது. ஓரளவிற்குத் தகவல் இருந்தாலும், திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அதை அறிவிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன். காரணம், இப்பொழுதே பலபேர் இந்தத் திட்டம் இந்தப் பகுதியில் வருகிறதா, அந்தப் பகுதியில் வருகிறதா என்று கேட்டு ஏழை விவசாயிகளிடம் இருக்கின்ற நிலங்களைக் குறைந்த விலைக்கு வாங்கி வைத்துக் கொள்வார்களேயானால் நாம் நினைக்கக் கூடிய அந்தச் சமூக நீதி கிடைக்காமலேகூடப் போய்விடும். ஆகவே, திட்டத்தை நிறைவேற்றும்பொழுது அதை அறிவிப்பதுதான் நல்லது என்று நான் கருதுகிறேன்.

கோதையாறு நீர்பாசனத் திட்டம்

* வினா எண் 237—திரு. பி. முகமது இஸ்மாயில்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கன்னியாகுமரி மாவட்டம் கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கோழிப்போர்விளை கிளைக் கால்வாய் அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலைமை என்ன?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது; (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி முகமதுஇஸ்மாயில் :- பேரவைத் தலைவர் அவர்களே, பல வருடங்களாக வற்புறுத்தப்பட்டு வரும் இந்தத் திட்டத்தை எடுத்துக் கொள்வதில் என்ன சிரமங்கள் இருக்கின்றன? இது எடுத்துக்கொள்ளப்படாமல் இருப்பதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புவதோடு, இந்தத் திட்டம் இனிமேலாவது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுமா என்பதையும் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : பேரவைத் தலைவர் அவர்களே, கோதையாறு நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் கோழிப்போர்விளை கிளைக்கால்வய் அமைக்கும் திட்டம் பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஏற்கனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு பாசனத்தின்கீழ் 64,000 ஏக்கர் ஆயக்கட்டுகளுக்குப் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி நீர்த்தேக்கங்களிலிருந்து பாசனவசதி அளிக்கப்படுகிறது. கடந்த சில வருடங்களாக இந்த நீர்த் தேக்கங்களுக்குப் போதிய நீர் வரத்து ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. சில சிரமங்களை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம், எனவே, இருக்கக்கூடிய

சட்டமன்றம் TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS